சிறுணியம் பலராமன் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்த ஆலோசனை கூட்டம்

அமைச்சர்கள் பி. தங்கமணி, பெஞ்சமின், பாண்டியராஜன் பங்கேற்பு

பார்லிமெண்ட் தேர்தலில்

40 தொகுதிகளிலும் அண்ணா தி.மு.க. வேட்பாளர்களை வெற்றி பெற செய்வோம்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகம் சூளுரை

பொன்னேரி, ஆக.10–

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் பார்லிமெண்ட் தேர்தலில் 40 தொகுதிகளிலும் அண்ணா தி.மு.க. வேட்பாளர்களை அமோக வெற்றி பெற செய்வோம் என்று திருவள்ளூர் மேற்கு மாவட்ட அண்ணா தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டத்தில் சூளுரைக்கப்பட்டது.

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம், இணைஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் ஆணைக்கிணங்க 2019–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற தேர்தல் பணிக்குழு மற்றும் பூத் கமிட்டிகள் அமைப்பது சம்பந்தமாக திருவள்ளூர் மேற்கு மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் செயல் வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் பொன்னேரி ஆர்.ஆர் திருமணமண்டபத்தில் மாவட்டச் செயலாளர் சிறுணியம் பி. பலராமன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரும், கழக அமைப்பு செயலாளருமான பி. தங்கமணி, ஊரக தொழில் துறை அமைச்சர் பா.பெஞ்சமின், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் க. பாண்டியராஜன், எம்.எல்.ஏ.க்கள் பி.எம்.நரசிம்மன், கே.எஸ். விஜயகுமார், முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா, மாநில ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் செவ்வை மு.சம்பத்குமார், முன்னாள் எம்.எல்.ஏ.வும் மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளருமான என்.எஸ்.ஏ. இரா.மணிமாறன் ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.

மாவட்ட கழக அவைத்தலைவர் தி.ப.கண்ணன், மாவட்ட கழக இணைசெயலாளர் ஆர்.விஜயலட்சுமி ராமமூர்த்தி, மாவட்ட கழக துணை செயலாளர் எம்.பொம்மி முனுசாமி, மாவட்ட பொருளாளர் செவ்வை. பி.ஜெயபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய கழக செயலாளர்கள் கே.ஏ.மோகனவடிவேல், பி கார்மேகம், வி.கோபால் நாயுடு, காட்டுப்பாக்கம் ஜி.திருநாவுக்கரசு, புட்லூர்.ஆர்.சந்திரசேகர், இ.கந்தசாமி, சூரகாபுரம்.எஸ்.சுதாகர், என். சக்திவேல், இ.என். கண்டிகை ரவி, ட்டி.டி.சீனிவாசன், பேரவை செயலாளர்கள் ஒய்.பட்டாபிராமன், எ.எம்.தயாளன், பொதுக்குழு உறுப்பினர் வி.பொன்னுதுரை, நகர செயலாளர்கள் ஜி.கந்தசாமி, ட்டி. சௌந்தர்ராஜன், ட்டி.தேவேந்திரன், முன்னாள் மாவட்ட மாணவரணி செயலாளர் எஸ்.கே.சேகர், பேரூர் கழக செயலாளர்கள் கும்மிடிபூண்டி மு.க.சேகர், திருமழிசை என். எஸ்.பிரகாஷ், பள்ளிப்பட்டு இரா. சண்முகம் ஆகியோர் வரவேற்று பேசினார்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

காவிரி நதிநீர் பிரச்சனையில் காவிரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று இறுதி ஆணையை பிறப்பித்தது. இந்த இறுதி ஆணை வெளியிட்ட பின்னர் நான்கு ஆண்டு காலம் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க. அரசு காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட ஒரு துரும்பகை' கூட கிள்ளிப்போடவில்லை. 2011ல் அம்மா ஆட்சிப் பொறுப்பேற்றதும் பல்வேறு சட்டப்போராட்டங்களை நடத்தியதன் காரணமாக 19.2.2013ல் மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

அம்மாவின் வழியில் இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் செயல்படும் தமிழக அரசு நடத்திய பல்வேறு சட்டப் போராட்டங்களின் பயனாக மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவை அமைத்து மதிய அரசிதழில் வெளியிட்டது.

தமிழ்நாட்டின் ஜீவாதார பிரச்சனையான காவிரி பிரச்சனையில் நமது உரிமைகளை நிலைநாட்டி நாட்டின் தானியக் களஞ்சியமான தஞ்சை உள்பட 12 மாவட்டங்களின் விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றியதற்கு முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரை பாராட்டி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

8 வழி சாலைக்கு வரவேற்பு

புரட்சித் தலைவி அம்மாவின் ஆசியுடன் நடைபெறும் பொற்கால ஆட்சியில் இந்திய துணைக் கண்டத்தில் முதன்முறையாக உலகத்தரத்திலான 8 வழிச்சாலையை அறிவித்து அதற்குரிய ஆக்கப்பூர்வ பணிகளை துரிதமாக மேற்கொண்டு இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழும் இத்திட்டத்தினை பாராட்டி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு சுமார் ரூ.25 கோடியும், பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் கட்ட ரூ.3 கோடியும், உள்ளாட்சித்துறை மூலம் பொன்னேரி பேரூராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ.44 கோடியும் மின்சார துறை மூலம் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை கொண்டுவந்த சம்மந்தப்பட்ட துறையின் அமைச்சரையும் பாராட்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

அடுத்த ஆண்டு ஜனவரி 1–ந் தேதி முதல் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்து வரை அறவே ஒழிக்கும் பொருட்டு அதற்குரிய விழிப்புணர்வு கூட்டங்களை தமிழ்நாடு முழுவதும் நடத்த உத்தரவிட்டு அம்மாவின் அரசு எடுத்துவரும் அனைத்து முயற்சிகளுக்கும் கழக தொண்டர்களாகிய நாமும், பொதுமக்களிடத்தில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாப்போம் என்று இதன் மூலம் உறுதிமொழி எடுத்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. வரும் 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி உட்பட 40 பாராளுமன்றத் தொகுதிகளிலும் தலைமைக் கழகம் அறிவிக்கும் வேட்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களை வெற்றிபெறச் செய்ய அல்லும் பகலும் அயராமல் பாடுபட்டு அம்மா கண்ட கனவை நிறைவேற்ற, போட்டியிடும் 40 தொகுதிகளிலும் எதிரிகளை தேர்தல் களத்தில் வீழ்த்தி கழக வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வேம் என உறுதியேற்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

அடுத்த 3 மாத காலத்திற்குள் அரசு ஒப்புதலுடன் தேர்தல் நடத்தப்படும் என்ற சூழ்நிலையில் உள்ளாட்சித் தேர்தலை சந்திக்க நாம் தயாராக இருக்க தேவையான தேர்தல் ஆயத்தப்பணிகளை ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் இடும் ஆணைகளை ஏற்று தேர்தல் பணியாற்றிக் கழகம் அமோக வெற்றிபெற அயராது பாடுபடுவோம்.

தமிழ்நாட்டில் உறுப்பினர் தேர்தலில் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகம் தமிழகத்தில் முதன்மை மாவட்டமாக திகழ, ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமியின் தலைமையின் கீழ் சிறப்பாக செயல்பட்டு வரும் கழகத்தை கட்டிகாத்து, எதிரிகளை தேர்தல் களத்தில் வீழ்த்துவோம் என சபதமேற்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் பஞ்செட்டி கே.நடராஜன், எஸ்.ட்டி. தர்மேஷ்குமார், ட்டி.பி.சம்பத்குமார், மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளர் பி.டி.பானுப்ரசாத், எல்லாபுரம் ஒன்றியகழக செயலாளர் பி.ரவிச்சந்திரன், ஆர்.பரிமேலழகன், முன்னாள் திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் கமாண்டோ.ஏ.பாஸ்கர், காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் வேலஞ்சேரி த.சந்திரன், முன்னாள் எம்.எல்.ஏ. க்கள் ட்டி. சக்குபாய் தேவராஜன், எம்.அருண் சுப்பிரமணியன், மாவட்ட எம். ஜி.ஆர் மன்ற இணை செயலாளர் காட்டுபாக்கம் கே.ராஜகோபால், கோ.வி.நாராயணமூர்த்தி, பத்ம ஜாஜனார்த்தனம், மாவட்ட சிறுபான்மைபிரிவு செயலாளர் சி.ஒய்.ஜாவித்அகமத், எம். நரேஷ்குமார் , கைவண்டுர் எத்துராஜ், டி. முல்லைவேந்தன், பேரவை இணை செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன், ஜீவாசுப்பிரமணி, பூபதி, தமில்செல்விரஜினிரவி தமிழ்செல்விதேவராஜ் கலைச்செல்வி மோகனவடிவேல் தனலக்ஷ்மி மோகனசுந்தரம் அம்மனி மகேந்திரன், பி.வெங்கட்ரமணா, பி.பாசுரான், சி.பத்மாவதி, கடம்பத்தூர் ரமேஷ், பூவை எஸ்.கோபிநாத், பி.கே. மணி, வழக்கறிஞர் கே.ஹரிகுமார், சி.சார்லஸ், தனலட்சுமி கோபிநாத், இருவே. தட்சிணாமூர்த்தி, இ.இன்பநாதன், எஸ்.எ.நேசன், கே.பி. எம்.எழிலரசன், எஸ்.வேல்முருகன், எ.செல்வம், எ.மஹபூபாஷா, வக்கீல் கோ.சீதாராமன், இ.ஜெக தீசன், வினோத்குமார், ஜெயின் க.லோகநாதன், சிற்றம் ஜெ.சீனிவாசன், ட்டி.எ.சௌகத் அலிகான், சி.சின்னசாமி, ஜி.சீனிவாசன், இ.எம். கலைச்செல்வி, மோகனசுந்தரம், டி.எம் பிரசாத், ஈக்காடு புல்லெட்ரவி, செவ்வை.எம்.முரளி, எஸ்.ருதுபாலன், எஸ்.செங்கரைபாபு, மகளிர் அணி காக்களூர் சௌந்தரி, ட்டி பூங்கோவன், சி.அரங்கநாதன், செவ்வை முருகன், எம்.பாஸ்கரன், எம்.ஆனந்தன், உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பொன்னேரி பேரூர் கழக செயலாளர் ஒய். உபயதுல்லா நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளரும், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் எம்.எல்.ஏ. சிறப்பாக செய்திருந்தார்.

சித்த மருத்துவம், ஆயுர்வேதம் உள்ளிட்ட

இந்திய மருத்துவ படிப்புகளுக்கு 14ந் தேதி முதல் விண்ணப்பம் வினியோகம்

சென்னை, ஆக. 10–

சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம் உள்ளிட்ட இந்திய முறை மருத்துவப் படிப்புகளுக்கு 14ம் தேதி முதல் விண்ணப்பம் வழங்கப்படுகிறது.

சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய இந்திய முறை மருத்துவப் படிப்புகளுக்கு தமிழகத்தில் 6 அரசுக் கல்லூரிகள் உள்ளன. இது தவிர 23 தனியார் மருத்துவக் கல்லூரிகளும் உள்ளன.

இங்கு பி.எஸ்.எம்.எஸ்., பி.ஏ.எம். எஸ்., பி.என்.ஒய்.எஸ்., பி.யூ.எம். எஸ்., பி.எச்.எம்.எஸ். பட்டப்படிப்பில் 2018–2019ம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை பிளஸ் 2 கட்–ஆப் மதிப்பெண் அடிப்படையில் நடைபெற உள்ளது. இப் படிப்புகளுக்கு 396 அரசு இடங்களும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 916 அரசு ஒதுக்கீட்டு இடங்களும் உள்ளன.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

இந்திய முறை மருத்துவப் படிப்புகளுக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் குறிப்பேடு விநியோகம் வரும் 14ம் தேதி தொடங்க உள்ளது. விண்ணப்பப் படிவங்கள் சென்னையில் 3 கல்லூரிகள், பாளையங்கோட்டை, மதுரை திருமங்கலம், கோட்டாறு ஆகிய இடங்களில் உள்ள 6 மருத்துவக் கல்லூரிகளில் விநியோகிக்கப்படும். நேரடி விண்ணப்ப விநியோகம் தவிர, www.tnhealth.org என்ற சுகாதாரத் துறையின் இணையதளத்திலும் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

விண்ணப்பங்களுக்கான கட்டணம் ரூ.500 ஆகும். சிறப்புப் பிரிவினருக்கு ரூ.100 ஆகும். தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கு கட்டணம் கிடையாது. விண்ணப்பங்களைப் பெறுவதற்கு செப்டம்பர் மாதம் 5ம் தேதி பிற்பகல் 3 மணி கடைசியாகும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அதே தேதியில் (செப்டம்பர் மாதம் 5ம் தேதி) மாலை 5.30 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படாது. இதுகுறித்து எந்த தகவலும் தனியருக்கு தெரிவிக்கப்பட மாட்டாது. மேலும் விவரங்களுக்கு இணையதளமுகவரி: www.tnhealth.org.பார்க்கவும்.

கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மத்திய அரசின் ஆயுஷ் துறையால் அங்கீகரிக்கப்படும் நிலையில் அரசு இடங்களின் எண்ணிக்கையில் மாற்றம் வர வாய்ப்புள்ளது.

தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் விழுப்புரம் கலெக்டர் சுப்பிரமணியன் ஆலோசனை

விழுப்புரம், ஆக. 10–

விழுப்புரம் மாவட்டத்தில் நகராட்சி, பேருராட்சி பகுதிகளில் தொடரும் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று நுகர்வோர் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

விழுப்புரத்தில் மாவட்ட அளவிலான தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான ஆலோசனைக் கூட்டம் கலெக்டர் சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நுகர்வோர் அமைப்பினர் பேசியதாவது:–

திண்டிவனம், கள்ளக்குறிச்சி நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளதால், 3 நாளுக்கு ஒருமுறை தண்ணீர் வழங்கப்படுகிறது. குடிநீர் பிரச்சனை தீரும் வரை நகராட்சி லாரிகள் மூலம் தடையின்றி குடிநீர் வழங்க வேண்டும் உள்பட பல்வேறு பிரச்சனைகள் குறித்து பேசினர்.

இதற்கு பதிலளித்து கலெக்டர் சுப்பிரமணியன் பேசுகையில், அனைத்து அரசுத் துறைகளிலும் 3 மாதத்திற்கு ஒருமுறை நுகர்வோர் ஆலோசனைக்குழு கூட்டம் நடத்த வேண்டும். குடிநீர் பிரச்சனையை தீர்க்க வேண்டும். ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். துறை சார்ந்த அலுவலர்கள், குறைகள் குறித்து உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பிரியா, திருக்கோவிலூர் சப்கலெக்டர் சாருஸ்ரீ, கோட்டாட்சியர்கள்சரஸ்வதி, தினேஷ், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ராஜேந்திரன் மற்றும் மாவட்ட தன்னார்வ நுகர்வோர் சங்க பிரதிநிதிகள் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொலை வழக்கு குற்றவாளிகள் உள்பட 13 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைப்பு

சென்னை, ஆக. 10–

சென்னையில் கொலை வழக்கு குற்றவாளி உள்பட 13 பேர் குண்டர் தடுப்புக்காவல் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சென்னை பெருநகரில் குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கண்டுபிடித்து கைது செய்யவும், குற்றச் செயல்கள் நடவாமல் தடுக்கவும் பல்வேறு குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சென்னை பெருநகரக் காவல் துறை கமிஷனர் ஏ.கே.விசுவநாதன் உத்தரவின்பேரில், தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அதன்படி 1.வினோத்குமார் (எ) ஓட்டேரி ஓணான், வ/27, செம்பியம் 2. வேலு (எ) வேலாயுதம், வ/26, திரு. வி.க நகர் 3.பிரகாஷ்,வ/23, ஆவடி 4.சுந்தர் (எ) அழுக்கு சுந்தர், வ/36, கொளத்தூர் ஆகிய நான்கு நபர்கள் மீது செம்பியம் காவல் நிலையத்திலும் 5.விவேக் (எ) லியோ விவேக், வ/28, மாதவரம் 6.அந்தோணி (எ) அந்தோணிராஜ், வ/35, கொளத்தூர் 7.ரஞ்சித்குமார், வ/23, கொளத்தூர் ஆகியோர் மீது ராஜமங்கலம் காவல் நிலையத்திலும், 8.சுரேஷ் (எ) நொண்டி சுரேஷ், வ/39, புளியந்தோப்பு என்பவர் மீதுபுளியந்தோப்பு காவல் நிலையத்திலும் 9.சூர்யா, வ/32, நெடுங்குன்றம், என்பவர் மீது பீர்க்கன்கரணை காவல் நிலையத்திலும், 10.கண்ணன், வ/35, நெற்குன்றம் என்பவர் மீது வேளச்சேரி காவல் நிலையத்திலும் 12. தினேஷ், வ/25, சின்ன போரூர் என்பவர் மீது வளசரவாக்கம் காவல் நிலையத்திலும், 12.செந்தில்குமார், வ/48, வியாசர்பாடி என்பவர் மீது மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவிலும், 13.செல்வபதி, வ/27, திருவொற்றியூர் என்பவர் மீது காசிமேடு காவல் நிலைய குற்றப்பிரிவிலும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, 13 பேரும் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்ததால், சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர்கள் பரிந்துரை செய்ததன்பேரில், ஏ.கே. விசுவநாதன், மேற்படி 13 பேரையும் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்ய உத்தரவிட்டார். அதன்பேரில் மேற்படி 13 பேரும் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதில் விவேக், அந்தோணிராஜ் மற்றும் ரஞ்சித்குமார் ஆகியோர் மீது கொலை மற்றும் பல்வேறு அடிதடி வழக்குகள் உள்ள நிலையில் அந்தோணிராஜ் ஏற்கனவே ஒரு முறை குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்.,
கும்பகோணம்
டெண்டர் அறிக்கை எண். 3/2018-2019 நாள் : 07.08.2018

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், காரைக்குடி மண்டல பேருந்துகளில் விளம்பரம் செய்து கொள்வதற்கு உரிய மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் இத்துறையில் முன் அனுபவமுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

டெண்டர் நிபந்தனை படிவங்களை உதவி மேலாளர் (பொருட்கள் - கூட்டாண்மை) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் புகைவண்டி நிலைய புதுச்சாலை கும்பகோணத்தில் **10.08.2018** முதல் **24.08.2018** வரை நேரில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். டெண்டர் படிவத்தின் விலை ரூ. **500/-** (திருப்பித் தரப்பட மாட்டாது). தபால் / கூரியர் மூலம் டெண்டர் படிவங்கள் பெற ரூ. **50/-** ஐ டெண்டர் படிவத்தின் விலையுடன் சேர்த்து வரைவோலையாக எடுத்து அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை (**www.tenders.tn.gov.in**) வழியாக இலவசமாக இணையிறக்கம் (**Downloading**) செய்தும் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். டெண்டர் படிவங்களை சமர்ப்பிக்கவேண்டிய இறுதி நாள்/நேரம்: **25.08.2018/2.00 PM.**

செ.ம.தொ.இ/3070/ஒப்பந்தப்புள்ளி/2018 **மேலாண் இயக்குனர்**

ஜின்னா, நேரு பற்றிய தனது கருத்துக்கு மன்னிப்பு கோரினார் தலாய்லாமா

தர்மசாலா,ஆக.10–

கோவா மாநிலம், பனாஜியில் அமைந்துள்ள கோவா மேலாண்மை கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற தலாய்லாமா மாணவர்களுடன் கலந்துரை யாடினார். அப்போது மாணவர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த அவர், சுதந்திரத்திற்கு பிறகு பிரிவினை ஏற்படாமல் ஒன்றிணைந்த இந்தியாவிற்கு முகமது அலி ஜின்னா பிரதமராக இருந்திருக்கலாம் என கருத்து தெரிவித்தார்.

மேலும், சிறுபான்மை இனத்தை சேர்ந்த ஒருவரே சுதந்திரத்திற்கு பிறகு இந்திய பிரதமர் ஆக வேண்டும் என்பதை மகாத்மா காந்தி விரும்பினார். ஆனால், காந்தியின் விருப்பத்தை நேரு ஏற்கவில்லை. நேருவிற்கு இருந்த சிறிது சுயநலமே இதற்கு காரணம் என தான் நினைப்பதாக தாலாய்லாமா கூறியிருந்தார்.

அவரது இந்த கருத்து பரவலாக சர்ச்சையை ஏற்படுத்தியநிலையில், அவர் மன்னிப்பு கோரியுள்ளார். 'எனது கருத்து சர்ச்சையை உருவாக்கிவிட்டது, நான் கூறியதில் தவறு இருக்குமானால் அதற்கு தான் மன்னிப்பு கோருகிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

பொது அறிவிப்பு

இதனால் யாவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் எனது கட்சிக்காரர் திரு.G.விஸ்வநாதன், வேலூரில் வசித்து வருகிறார். மேற்படி எனது கட்சிக்காரருக்கு சொந்தமான ஒரிஜினல் சொத்துகளுக்கு சம்மந்தபட்ட அசல் செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு எண்.3494/2008, தேதி 18.02.2008 மற்றும் சில ஆவணங்கள் எனது கட்சிக்காரர் நகல் எடுக்க செல்லும்போது பழைய பர்மா பஜார் அருகில் காணாமல் போய்விட்டது.

மேற்படி ஆவணங்களை யாரேனும் கிடைக்கபெற்றால் கீழ்க்காணும் எனது அலுவலக முகவரிக்கு தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஜி.ரவி, பிஎஸ்.சி., பி.எல்
வழக்கறிஞர்
எண்.248, காமராசர் நகர்,
தொரப்பாடி, வேலூர் 632 002.
கைபேசி எண்: 9443964602

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB
CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

ஜூன் 30, 2018 வரை முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

ரூ. லட்சத்தில் (EPS தவிர)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2018 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு மார்ச் 31, 2018 (தணிக்கை செய்யப்பட்டது)	முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2017 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2018 (தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம்	17,569	15,750	13,969	55,558
2	இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	2,373	1,221	1,394	5,452
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	2,305	1,147	1,306	5,264
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	1,539	919	907	3,715
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	1,549	1,033	886	3,756
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539
7	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)				
	அ) அடிப்படை	10.00	5.97	5.89	24.13
	ஆ) குறைமதிப்பு	10.00	5.97	5.89	24.13

குறிப்பு :

1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் முழு ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் முழு ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணைய தளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் NSE India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

சென்னை
9 ஆகஸ்ட், 2018

Your Partner in Welding & Cutting
Visit our website : http://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்